## இந்து முன்னேற்ற கழகம்.



**இந்து வேத வழி ஒன்றுபடுவோம் !**
**உலக அருளாட்சி அமைப்போம் !!**
**மொழி, இன, மத விடுதலை உருவாக்குவோம் !!!**

**பத்தி, சத்தி, சித்தி, முத்தி பெற ?!**

**அனைத்துப் பாதிப்புக்களுக்கும் பரிகாரங்கள் அடைய ?!**

# மூன்று நாகங்கள் பூசை செய்யும், பதினெண் சித்தர் மடத்தின் கருகுலம் வாரீர்!



நன்றி : குமரி முரசு நாளேடு, 27-2-92 வியாழக்கிழமை மூன்றாவது பக்கத்தில் வந்துள்ள கட்டுரை

**காணிக்கை: ரூ. 1-50**

# பதினெண்சித்தர் திருச்சபை அறக்கட்டளையின்

## செயல் திட்டங்கள்

பதினெண் சித்தர்களின் இலக்கியங்களை அச்சிடல்; இந்துவேத பாடசாலைகளை நாடெங்கும் நடத்துதல்; சித்த மருத்துவ முறைகளை ஆராய்தல்; அருட்கலைகளைப் பயிற்றுவித்தல்; தவம், பூசை, ஞானம், வேள்வி, குண்டலினி ஓகமுறை, யோகமுறை, ஓகாசனப் பயிற்சி முறை, யோகாசனப் பயிற்சிமுறை, சேவலோன் போர்க் கலைகள்,... முதலியவைகளை மீண்டும் புத்துயிர்ப்புச் செய்தல்; கற்பித்தல்; சித்தர்நெறிச் சூழலில் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் (பாலுகர்) பாலகர்பள்ளி, இளம்பிள்ளை பள்ளி, வாலிபர் கல்விச் சாலை,.. முதலியவைகளை மீண்டும் தோற்றுவித்தல்; அனாதை இல்லம், முதியோர் காப்பகம், இலவச மருத்துவமனை... முதலியவைகளை நடத்துதல்

---

அரசாங்க ஒப்புதல் பெற்ற இந்நிறுவனத்திற்கு நன்கொடை வழங்குவோருக்கு வருமானவரிச் சலுகை (80 G) 1961-ன் கீழ் வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி :

நிர்வாக அறங்காவலர்,
**பதினெண் சித்தர் திருச்சபை,**
13, குமாரசாமி முதலி தெரு, வரதராசபுரம்,
அம்பத்தூர், சென்னை - 53.
தொலைபேசி : **65 44 47**

---



# மூன்று வகை நாகங்கள் பூசை செய்யும் கோயில்

## இந்து வேதத்தை வழங்கிய பதினெண் சித்தர் மடம்

## இந்து மதத்தை உருவாக்கிய பதினெண் சித்தர் பீடம்

சென்னை - செங்குன்றம் GNT நெடுஞ்சாலையிலுள்ள காரனோடைக் கிராமத்தில் இந்த அதிசயக்கோயில் இந்து வேதத்துக்கு விளக்கமாகவும், இந்து மதத்துக்கு அடிப்படையாகவும், உயிர் நாடியாகவும் செயல்படுகிறது.

இந்த உலகில் தோன்றியுள்ள எல்லா மதங்களுமே நாகத்தை (பாம்பை), தீயசக்தியாக,

சாத்தானாக, பேயாக, மந்திரவாதியாக, கெடுதலின் அறிகுறியாக,... விளக்கம் தருகின்றன. ஆனால், இந்த உலகின் மூல வேதமும், முதல் வேதமும், முழுமையான வேதமும், இந்த உலகில் தோன்றக் கூடிய எல்லா வகைப்பட்ட மொழியினருக்கும் இனத்தவர்க்கும், நாட்டவர்க்கும் உரிய பொது வேதமென்று படைக்கப்பட்ட வேதமாகவும், காலங்கள் தோறும் தேவைக்கேற்ப புதிய கருத்துக்களையும் சேர்த்துக் கடவுள்களாலேயே எழுதித் தரப்படுகின்ற வேதமாகவும் இருக்கின்ற; 'பதினெண்சித்தர்களுடைய இந்து வேதத்தில்' நாகம் கடவுளாக, தெய்வமாக, தேவதையாக, தேவியாக, அனைத்து வகைப்பட்ட அம்மனாக,... வழிபாட்டுக்குரிய சிறந்த சத்தியாக, நல்லதாக விவரிக்கப்படுகிறது.

இந்த இந்துவேதக் கருத்தின்படியே இந்து வேதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண் சித்தர் மடத்தின் கோயிலில் மூன்று வகைப்பட்ட நாகங்கள் 'கோதுமைநாகம்', 'கருநாகம்', 'செந்நாகம்' எனும் மூன்றும் அருளுலகில் என்றென்றும் அருளாற்றல் காக்கப்படுவதற்காகப் பூசைகள் செய்கின்றன.



சென்னைக் காரனோடைக் கிராமத்திலுள்ள பதினெண்சித்தர் மடத்தில்தான் நூற்றெட்டு (108) வகைத் திருப்பதிகளுக்கும், இருநூற்று நாற்பத்து மூன்று (243) வகைப்பட்ட சத்தி பீடங்களுக்கும், ஆயிரத்தெட்டு (1008) வகைப்பட்ட சிவாலயங்களுக்கும், புத்துயிர்ப்புத் தரக் கூடிய சக்கரங்கள், தகடுகள், இயந்தரங்கள், இயந்திரங்கள், இயந்திறங்கள், ஈயந்தரங்கள், ஈயந்தரீகங்கள், எந்தரங்கள், எந்திரங்கள், எந்திறங்கள், ஏந்தரங்கள், ஏந்தரீகங்கள், எனும் பன்னிரண்டு வகைப்பட்ட இராசிநிலைச் சத்திகள் தயாரிக்கப்படுகின்றன. மேற்படி திருப்பதிகளும், சத்திபீடங்களும், சிவாலயங்களும் புதிதாகக் கட்டப்படுமேயானால் அவற்றிற்கு உயிர்ப்பு ஊட்டக்கூடிய பன்னிரண்டு வகைப்பட்ட இராசிநிலைச் சத்திகளும் இங்கு தயாரிக்கப்படுகின்றன. இவற்றிற்காக, சிவனுக்குரிய வட்டவடிவ யாக குண்டமும், பிறமனுக்குரிய சதுர வடிவ யாக குண்டமும், முருகனுக்குரிய ஆறு கோண வடிவ யாக குண்டமும், சத்திக்கும், திருமாலுக்கும் உரிய கண்வடிவ யாக குண்டமும் அமைந்திருக்கின்றன. இவற்றில் எழுப்பப்படுகின்ற ஓமத்தீ, ஓகத்தீ, யாகத்தீ, யக்ஞத்தீ, வேள்வித்தீ எனப்படும் ஐந்தீ வேட்டல் ஆற்றல்-

களைக் கொண்டுதான் மேலே குறிப்பிட்டது போல் திருப்பதிகளுக்கும், சத்தி பீடங்களுக்கும், சிவாலயங் களுக்கும், உயிர்ப்புகளும், புத்துயிர்ப்புகளும் செய்யப்படக் கூடிய பன்னிரண்டு இராசி நிலைச் சத்திகளும் தயாரிக்கப்படுகின்றன. இவைகள் அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார், இந்துமதத் தந்தை, இந்து வேதநாயகம், இந்து வேதபீடம், குரு மகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள் போதகராகவும், சாதகராகவும் இருந்து; தமது குருகுலம், திருகுலம், தருகுலம், கருகுலம் ஆகிய நான்கின் மூலம் தயாரித்துள்ள சன்னிதானங்கள், ஆதீனங்கள், தம்பிரான்கள், ஆச்சாரியார்கள், பண்டாரங்கள், பண்டார சந்நதிகள் பண்டார சந்நிதிகள், அரிய வாள்கள், கூரிய வாள்கள், சீரியவாள்கள், பெரியவாள்கள், நேரியவாள்கள் வீரியவாள்கள், ஏமகோடிப் பீடாதிபதிகள், காம கோடிப் பீடாதிபதிகள், சோமகோடிப் பீடாதிபதிகள் வாமகோடிப் பீடாதிபதிகள், முதலியவர்களால் மேலும் தொடர்ந்து பூசைகளைச் செய்து அருள் வளத் தோடும் அருள் வலிவோடும், பொலிவோடும் முழுமையாகச்செயல்படும்படிச் செய்யப்படுகின்றன. இவற்றிற்கெல்லாம் மேலாக மூன்று வகைப்பட்ட நாகங்கள் இந்த ஐந்தீ வேட்டலுக்கு உரிய யாக



குண்டங்களைச் சுற்றிச் சுற்றி வந்து பூசை செய்து அருள் நலம் செழிக்கும்படிச் செய்து வருகின்றன. எனவே இந்து வேதம் மானுட இனம் அனைத்திற்கும் பயன்படும்படியான அருளாற்றல்களை வழங்குவதற்காகத் தொடர்ந்து பூசை செய்து வருகின்றன. என்ற பேருண்மை இக்கட்டுரை மூலம் பொதுவாக உலக மக்களுக்கும், சிறப்பாக இந்து மக்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது, அறிவிக்கப்படுகிறது.

நாகங்கள் பூசை செய்யும் இந்த அரிய கோயில் ஒரு சோலை போல் இருக்கிறது. இதற்குள் சென்று வரக் கூடிய மக்கள் அனைவரும் எல்லா வகைப்பட்ட அருட்செல்வங்களையும் பெறுகிறார்கள். ஆனால் பொது மக்கள் செவ்வாய், வெள்ளி மாலை நேரத்திலும், ஞாயிறு காலை முதல் பகல் உச்சி வேளை வரையிலும் மட்டுமே உள்ளே அனுமதிக்கப்படுகிறார்கள். மற்ற நேரங்களில் யாரும் உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை. பொது மக்களும் நாகங்களுக்கு அஞ்சி இக்கோயில் எல்லைக்கு அருகிலேயே செல்வதில்லை மற்ற நாட்களில்.

பன்னிரண்டு இராசி நிலைச் சத்திகளும் விளைவிக்கப்படுகின்ற இந்தப்பதினெண் சித்தர் மடத்துக் கருகுலக்கோயிலில்;

1. காற்று 2. கருப்பு 3. பேய் 4. பிசாசு 5 பில்லி 6 சூனியம் 7 ஏவல் 8 செய்வினை 9. வைப்பு 10 களிப்பு 11 மருந்து 12 கண்ணேறு எனப்படும்

**பன்னிரண்டு வகைப்பட்ட தீயசக்திகளாலும்**

பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய
எல்லா வகைப்பட்ட பாதிப்புக்களும் நலப்படுத்தப்படுகின்றன. அத்துடன் நாள் கோள், மீன் பாதிப்பு
செவ்வாய் தோசம், நாகதோசம்,
கழுத்தரதோசம்,...
முதலிய அனைத்துவகைப்பட்ட
பாதிப்புகளுக்கும் முடி கயிறு, தாயத்து, உருத்திராக்கம், பில்லை,... முதலிய அருளூறு பாதுகாப்புப் பூசனைப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

இப்பதினெண் சித்தர் மடத்துக் கருகுலத்தில் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் பதினெண்சித்தர்கள் வழங்கியுள்ள இந்து வேதம் வளர்ப்பதற்காக இந்து வேத பாடசாலை நடத்தப்படுகின்றது. இதன் மூலம் பூசை, தவம், குண்டலினி



ஓகாசனம், யோகாசனம், சித்தி முறை,... முதலியவை கற்றுத்தரப்படுகின்றன. இதற்காகச் செவ்வாடை அணிந்து வருபவர்கள் மட்டுமே கருகுலக்கோயிலில் உள்ள மூன்று நாகங்களுக்கும் அறிமுகமாகி எல்லா நாட்களிலும் கோயிலுக்குள் சென்று வருகிறார்கள்.

இந்த அதிசயக் கோயிலை இந்துக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

---

தொடர்பு :

**அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,**
**கருகுல ஆதீனம்,**
**வரதராசபுரம்,**
**அம்பத்தூர், சென்னை-53**
**தொலை பேசி எண் : 654447**

# தொடர்பு முகவரிகள் :

இ. மு. க. பாரம்பரியத் தலைவர்
**அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,**
வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை - 53.
தொலைபேசி : 654447

இ. மு. க. அவைத்தலைவர், முதல் விசயாலய சோழன்,
பஃறுளி கம்ப்யூட்டர்சு, 12, சலைவான் தெரு,
சாந்தோம், சென்னை - 4. தொலைபேசி : 74359

பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம்,
G. N. T. சாலை, காரனோடை, சென்னை - 600 067.

இ. மு. க. பொதுச்செயலாளர்
**கு. இரவிமணி B. Sc., B. Tech.**
3, சிவாசிநகர், மேம்பாலம், தஞ்சாவூர்.

இந்து வேதம் பரப்பும் நாயகம்
**த. கேசவன்**
உரக்கடை, 266, கீழவெளிவீதி, மதுரை - 625 001.

இ. மு. க. சேலம் மாவட்ட தலைவர்
**இரா. கங்காதரக்குமார்**
17, கவரைத் தெரு, இராசிபுரம், சேலம் மாவட்டம்.

இ. மு. க. கோவை மாவட்டத்தலைவர்
**இரா. ராமசாமி**
6/447 திருவள்ளுவர் நகர்,
சிறுமுகை - 641302. கோவை மாவட்டம்.

முழுக்க முழுக்க இந்துவேதத்தைக் கற்கவும், இந்துமதத்தின் கலைகளைப் பயிலவும், அருட்பணி ஆற்றவும் மக்களைத் தயாரிக்க இந்து மறுமலர்ச்சி இயக்கம் (இ. ம. இ. - I. M. I.,) பாடுபடுகிறது.

இந்துவேதவழி இந்துவேத வாழ்வியல் நடை முறைகளைச் செம்மைப்படுத்திச் சமுதாய மறுமலர்ச்சியை- யும், அருளாட்சியையும் அமைத்திட இந்து முன்னேற்ற சமூகம் (இ. மு. க- I. M. K.) பாடுபடுகிறது.

இவற்றில் உறுப்பினராகவும், ஆங்காங்கே கிளைகள் அமைக்கவும் தொடர்பு கொள்க.

3, N.G.O. நகர்,
பொன்னேரி-601 204.

ஞானச்சாரியார்,
வரதராசபுரம்,
அம்பத்தூர்,
சென்னை - 53.
தொலைபேசி : 654 447